



நீலகிரி மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்களாக வெற்றிபெற்றுள்ள தி.மு.க. வேட்பாளர்கள் மாவட்டக் கழக அலுவலக வளாகத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் ஆகியோரது சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி மாவட்டக் கழகச் செயலாளர் பா.மு.முபாரக்கிடம் வாழ்த்துப் பெற்றனர்.

## மணப்பாறை அருகே சாலை விபத்து:

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.2 லட்சம் நிதி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, ஜூன் 27 -

மணப்பாறை அருகே சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ. 2 லட்சம் நிதி வழங்க முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்ப தாவது:-

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறைவட்டம், வையம்பட்டி கிராமம் லெட்சம்பட்டி பிரிவு ரோடு அருகே, திருச்சிராப்பள்ளி திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் நேற்று (25-6-2023) மாலை திண்டுக்கல்லில் இருந்து திருச்சி நோக்கி சென்ற காரின் டயர் எதிர்பாராதவிதமாக வெடித்து திருச்சியில் இருந்து திண்டுக்கல் நோக்கி சென்ற அரசுப் பேருந்தின் மீது மோதியதால் ஏற்பட்ட விபத்தில் காரில் பயணம் செய்த மணப்பாறை வட்டம், கே.உடையாப்பட்டியைச் சேர்ந்த முத்தமிழ்செல்வன், (வயது 40), ஐயப்பன், (வயது 35) மணிகண்டன், மணப்பாறை வட்டம்,

ஆலிப்பட்டியைச் சேர்ந்த நாகரத்தினம், மற்றும் தோகைமலை வட்டம், பில்லூரைச் சேர்ந்த தீனதயாளன், (வயது 19) ஆகிய ஐந்து பேரும் உயிரிழந்தனர் என்ற செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 2 இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் குறிப்பிடப் பட்டுள்ளது.

## அவைத் தலைவர் கோ.துரைபாண்டியன் ஏற்பாட்டில் - கோவை வடக்கு மாவட்டம்-

# கவுண்டம்பாளையம் பகுதி - அண்ணா நகரில் மரக்கன்றுகள் நடும் விழா!

### மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் மாலதி தலைமையில் நடைபெற்றது!

கோவை, ஜூன் 27-

கோவை வடக்கு மாவட்டம் கவுண்டம்பாளையம் பகுதி அண்ணா நகரில், முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவினை ஒட்டி, ஞாயிற்றுக்கிழமை 25.6.2023 அன்று காலை 10.00 மணிக்கு, வாரந்தோறும் தொடர்ந்து பனிரெண்டாவது நிகழ்ச்சியாக, மரக் கன்றுகள் நடு விழா நலச் சங்கங்களின் கூட்டமைப்பின் முன்னெடுப்பில், அண்ணா நகர் மற்றும் அருகிலுள்ள நகர்களில் வாழும் பொது மக்களின் ஒத்துழைப்புடன், உறுதுணையுடன், மரக்கன்றுகள் அறிஞர் அண்ணா நகரில் அமைந்திருக்கும் கம்பீர சித்தி விநாயகர் ஆலயத்தில் இருந்து, மரக்கன்றுகள் நடும் தொடக்க விழா கழக மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளரும் கோவை மாநகராட்சியின் கல்வி பூங்கா, விளையாட்டு மைதானங்கள் குழு தலைவியும், மாமன்ற உறுப்பினருமான திருமதி மாலதி தலைமையில் ஆரம்பித்து, அடுத்து மாசாணி அம்மன் நகர் செல்லும் சாலையின் இரு புறமும், வடவள்ளி ரோட்டிலும் மரக்கன்றுகள் நடப்பட்டன.

இந்நிகழ்வில் மூத்த முன்னோடியும் மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் துணை அமைப்பாளர் கா.பொன்னரசு மற்றும் சுமார் 90,000 மரக்கன்றுகளை நட்டு வெற்றிகரமாக தொடர்ந்து நடத்தி கொண்டிருக்கும் அரிமா சங்க நிர்வாகியும் கழக கண்மணியுமான லயன் வீரான் குட்டி ஆகியோர் முன்னிலை வகிக்க, மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் வட்டக் கழக BLA 2 ஆலிஸ் பிரசன்னா, தொண்டரணி மோகன் குமார், காவல் துணை ஆய்வாளர் (ஓய்வு) மதிவாணன், சமூக ஆர்வலர் தர்மராஜ், மாசாணி அம்மன் நகர் வட்டக் கழக BLA 2 அக்ரோ வாட்டர் சாமி, இளைஞர் அணி விக்னேஷ், வர்த்தக அணி ரவி முரசு, முன்னாள் வட்டப் பிரதிநிதி குமார், வர்த்தக அணி ராம்குமார், சமூக ஆர்வலரும் அரிமா சங்க நிர்வாகியும் வர்த்தக அணியைச் சார்ந்த குமரேசன், மகளிர் அணி வட்டக் கழக BLA 2 கவிதா, காவல் துணை ஆய்வாளர் (ஓய்வு) பரமேஸ்வரன், சமூக ஆர்வலர்கள் கணுவாய் கிருஷ்ணமூர்த்தி, மற்றும் சங்கர், மதுரை முத்துவேல், லட்சுமி நகர் காலபைரவர் கோயில் காப்பாளர் கண்ணன், லட்சுமி நகர் விநாயகர் கோயில் கமிட்டி நிர்வாகி பாலன், இடையர் பாளையம் வினோத்குமார், வீராச்சாமி, அட்வகேட் சுப்பிரமணியம், மகளிர் அணியைச் சார்ந்த மல்லிகா ஜெகதீசன், சாவித்திரி, ரேவதி, விஜயா, செல்வி, ராமாமிர்தம், ஜெயலட்சுமி, அகிலா, திவ்யா, கீர்த்தனா மற்றும் மணிகண்டன், சரவணக்குமார் மற்றும் எங்களுடன் இணைந்து, இன்று திருமணம் செய்து கொண்ட புதுமண தம்பதிகள் கீர்த்தனா, சரவணகுமார் ஆகியோரும் மரக்கன்றுகளை நட்டனர்.

தொடர்ந்து வரும் ஞாயிற்றுக்கிழமை 2.7.2023 அன்று பிறபகுதிகளில் மரக்கன்றுகள் நடப்படும் என நலச்சங்கங்களின் கூட்டமைப்பின் சார்பாக அதன் ஒருங்கிணைப்பாளரும் தி.மு.க. அவைத் தலைவருமான சோ. துரைபாண்டியன் தெரிவித்துள்ளார்.

## கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்தில்

# ஒன்றிய, பகுதி, பேரூர் இளைஞர் அணி விருப்பமனு!

### மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



கழக இளைஞர் அணி செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பிற்கிணங்க கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்தில் ஒன்றிய, பகுதி, பேரூர் வாரியாக கழக இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்களுக்கான விருப்பமனு 29.06.2023 வியாழக்கிழமை மாவட்டக் கழக அலுவலகத்தில் பெறப்படுகிறது.


எனவே ஒன்றிய, பகுதி, பேரூர் வாரியாக அமைப்பாளர், மற்றும் துணை அமைப்பாளர்கள் பதவிக்கு விருப்பம் உள்ளவர்கள் விருப்பமனுவை ஒசூர் மாவட்டக் கழக அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**தளி.ஒய்.பிரகாஷ் , எம்.எல்.ஏ**
செயலாளர்
கிருஷ்ணகிரி (மேற்கு) மாவட்ட தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்

### ஜூன் 27 (1962)



திராவிட இயக்க வரலாற்றில் 1938ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டம் ஒருமைல் கல்லாகும். இந்தப் போராட்டத்தில் திருச்சி, உறையூர் முதல் சென்னை வரை 42 நாட்கள் இந்தி எதிர்ப்பு பேரணி நடைபெற்றது. இப்பேரணியில் 577 மைல்கள் நடந்தே வந்தவர் இவர். 87 பொதுக் கூட்டங்களில் உரையாற்றியுள்ளார்.

மேலும், சென்னையில் பள்ளி முன் இந்தி திணிப்பை எதிர்த்து, மறியல் செய்து கைது செய்யப்பட்டு ஆறு மாதங்கள் வேலூர் சிறையில் இருந்தார்.

இவரின் 50 ஆண்டுகால பொது வாழ்க்கைக்கு அவர் வாழும்போதே பெற்ற ஒரே அங்கீகாரம் தி.மு.க. சார்பில் அண்ணா வழங்கிய விருதுதான். சுயமரியாதை இயக்கத்திற்காக உழைத்தவர்களுக்கு தி.மு.க. சார்பில் விருது வழங்கி சிறப்பிக்க அண்ணா முடிவு செய்தார். இதற்கு இவருடைய பெயரைத்தான் அண்ணா முதன்முதலில் தேர்வு செய்தார்.

தலைவர் கலைஞர் அவர்கள் 1989ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக தமிழக முதல்வராக பொறுப்பேற்றபோது, முதல்முறையாக ஏழைப்பெண்கள் திருமண உதவித் திட்டத்தை தொடங்கி வைத்து அதற்கு "மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம்" என்று இவரது பெயரை வைத்து, தொடர்ந்து செயல்படுத்தினார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# திருச்சி தெற்கு மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!



### மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு !

**திருச்சி தெற்கு மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகள் கீழ்க்கண்ட தேதிகளில் தெருமுனை பிரச்சாரம், ஏழை எளியோர்க்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெறுகின்றது.**

**(ஜூன் - 2023 - ஜூன் 2024) ஜூன் மாத நிகழ்வுகள் 2023**

| வ.எண் | நிகழ்ச்சிகள் | நிகழ்ச்சி ஏற்பாடு | தலைமை | சிறப்பு அழைப்பாளர் |
|---|---|---|---|---|
| 27-06-2023 மாலை 6 மணி | தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் 35,35A அரியமங்கலம் பகுதி | பா.ரெங்கநாதன் அ.கதிர்வேல் | கடையநல்லூர் இஸ்மாயில் தலைமை கழக பேச்சாளர் |
| 30-6-23 காலை 10.30 மணி | மாவட்ட மாநகர நெசவாளர் அணி சார்பாக நலிந்த சலவை தொழிலாளர்களுக்கு கதர், கைத்தறி துணி மற்றும் நலத்திட்டங்கள் வழங்குதல் | மாவட்ட, மாநகர நெசவாளர் அணி | ஆர்.பி .சுந்தர்ராஜன் மாவட்ட அமைப்பாளர் A.பெஞ்சமின் மாநகர அமைப்பாளர் | எஸ்.எல்.டி.ப.சச்சி தானந்தம் மாநில செயலாளர் |
| 28-06-23 மாலை 6 மணி | தலைவர் கலைஞர் அவர்களுக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் 40,40A திருவெறும்பூர் பகுதி | அ.குணாநிதி ஆர்.அருண் குமார் | சேலம் கோவிந்தன் தலைமை கழக பேச்சாளர் |
| 29-06-23 காலை 9.00 மணி | மார்க்கெட் மண்டி தொழிலாளர்களுக்கு தலைவர் கலைஞர் முகம் பொறித்த ஆடைகள் மற்றும் வீட்டுக்கு தேவையான மளிகை பொருட்கள் வழங்கும் விழா ! | மாவட்ட, மாநகர தொழிலாளர் அணி | JJ.மகேஸ் மாவட்ட அமைப்பாளர் எ.பி.ரகுநாதன் மாநகர அமைப்பாளர் | பி.டி.சி.ஜி.செல்வராஜ் மாநிலச் செயலாளர் |
| 29-06-23 காலை 10.00 மணி | உலமாக்களை அழைத்து சிறப்பு செய்யும் நிகழ்ச்சி நலத்திட்ட உதவிகள் | மாநகர அவைத்தலைவர் | பி.ஏ.நூர்கான் | மு.மதிவாணன் மாநகர கழக செயலாளர்- திருச்சி டவுன் ஹாஜியார் |
| 29-6-23 மாலை 6.00 மணி | தலைவர் கலைஞர் அவர்களுக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | (வட்ட எண் - 36) (வட்ட எண் 36A) செயலாளர்கள் | ஆர்.சுரேஷ், எம்.ஆனந்த் வட்ட கழக | ஆலந்தூர் மலர்மன்னன் தலைமை கழக பேச்சாளர் |
| 30-06-23 மாலை 6.00 மணி | தலைவர் கலைஞர் அவர்களுக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் 18,18A மார்க்கெட் பகுதி | ஒய்.சிலம்பரசன் சி.பாண்டியன் | சேலம் சுஜாதா தலைமை கழக பேச்சாளர் |

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி**,
செயலாளர், திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.

## ரூ.380 கோடி மதிப்பில்

# திருச்சியில் ஒருங்கிணைந்த பேருந்து முனையம்!

### அமைச்சர் கே.என்.நேரு ஆய்வு!

திருச்சி ஜூன் 27-

திருச்சியில் ரூபாய்.380 கோடியில் நடைபெற்று வரும் ஒருங்கிணைந்த பேருந்து முனைய பணிகளை அமைச்சர் கே.என். நேரு ஆய்வு மேற்கொண்டார்.

திருச்சி - மதுரை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள பஞ்சப்பூரில் ரூபாய் 380கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த பேருந்து முனையம் பணிகள் நடைபெற்றுவருகிறது.இந்தபணிகளை தமிழ்நாடு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேருநேரில்சென்று ஆய்வு மேற்கொண்டார்.

இதனை தொடர்ந்து செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அதுவருமாறு:-

கலைஞரின்நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 100 இடங்களில் மருத்துவ முகாம் மற்றும் காப்பீட்டு திட்டத்திற்கானபதிவுநடைபெற்று வருகிறது.

திருச்சியில் எடமலைப் பட்டிபுதூர், அரியமங்கலம்,லால்குடி உள்ளிட்ட மூன்று இடங்களில் நடைபெறுகிறது .இதில் ஒவ்வொரு முகாம்களிலும் 100 மருத்துவர்கள் சிகிச்சை அளித்து வருகின்றனர்.

ஒருங்கிணைந்த பேருந்து முனையம் பணிகள் தற்பொழுது 380கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. அடுத்தபடியாக மார்க்கெட் கொண்டுவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. அதற்கான திட்ட அறிக்கைகள் தயார் செய்யப்பட்டு வருகிறது.

மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனைகளை கொண்டுவதற்கான பணிகளும் நடைபெற்று வருகிறது. குடம்முருட்டியில்இருந்துபஞ்சப்பூர்வரை சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகளுக்காக திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு முதலீடுகளுக்காக வைக்கப்பட்டுள்ளது.

10ஏக்கரில்ஐடிபார்க்வரவுள்ளது. மேலும்பஞ்சப்பூர் பைபாஸ் சாலைக்கான டெண்டர் விடப்பட்டுள்ளது. தேசிய நெடுஞ்சாலையில் இருந்து பேருந்து நிலையத்திற்கு வருவது போலகத்திபாரா போன்று டிசைன் அமைக்கப்பட்டுள்ளது. வெயிலில் நீரை காய வைக்கும் முறையில் சுமார் 300 கோடி செலவில். ஒரு நாளைக்கு 100 எம்.எல்.டி. சுத்திகரித்து வாய்க்கால்களில் விடப்படவுள்ளது.

நெடுஞ்சாத்துறை முதன்மை அதிகாரிகள் பார்வையிட்டுள்ளனர்.தற்பொழுது காவிரி பாலம் முதல் குடமுருட்டி வரை மேல் மட்டசாலைபணிகள்ஆரம்பிக்கப்பட உள்ளது. இதே போல் புதிய காவிரி பாலமும்பணிகள்ஆரம்பிக்கப்பட உள்ளது. திருச்சி மெட்ரோ இரயில் பணிகள் ஆய்வுமேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறு அவர் பேட்டி அளித்தார்.

இந்த ஆய்வின் போது திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர்பிரதீப்குமார், மாநகராட்சி ஆணையர் வைத்திநாதன், மாநகராட்சி மேயர் அன்பழகன், நகரபொறியாளர் சிவபாதம் மற்றும் நெடுஞ்சாலைதுறைஅதிகாரிகள் உடன் இருந்தனர்.



மக்கள் நலன் காக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு என்றும் உங்களுக்கு உறுதுணையாக இருக்கும் என்பதை நிரூபிக்கும் வகையில் திருப்பூர் காதர்பேட்டை பனியன் பஜாரில் தீ விபத்தில் பாதிக்கப்பட்ட 51 கடைகளின் உரிமையாளர்களுக்கு ஆறுதலாக தனது சொந்த நிதியிலிருந்து ஒரு கடைக்கு 50 ஆயிரம் வீதம் 51 கடைகளுக்கு 25 இலட்சத்து 50 ஆயிரம் ரொக்க பணத்தை திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர், வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.செல்வராஜ் வழங்கினார். இதில் திருப்பூர் தெற்கு மாநகரக் கழகச் செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், மாநகராட்சி துணை ரா.பாலசுப்பிரமணியன் உள்பட மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# அலமேலு அப்பாதுரை

### ஜூன் 27 (2001)



தி.மு.க. மகளிர் அணிச் செயலாளராகவும் – தலைமை நிலையச் செயலாளராகவும் – தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் – சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

தி.மு.க. மகளிர் அணியினைச் சிறப்பாக கட்டிக் காப்பாற்றியவர்.

1938ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி திணிப்பு எதிர்ப்பு கிளர்ச்சியிலும், பின்னர் நடைபெற்ற கறுப்புக் கொடி போராட்டம், விலைவாசி உயர்வு போராட்டம் உள்ளிட்ட பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**